**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.376/2019 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.3 |
| Name : | திரு. கருணாமூர்த்தி |
| Father's Name/Husband Name: | திரு. கிருஷ்ணமூர்த்தி |
| Village : | நான்கு ரோடு, துறைமங்களம் |
| Taluk : | பெரம்பலூர் |
| Age : | 38/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 11.02.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1 மற்றும் 2 ஆஜர்)**

**சாட்சியானவர் கு.வி.மு.ச பிரிவு 311ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

முதல் விசாரணையில் கூறிய சங்கதிகளை தான் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் நான் ேஹாட்டல் கேசியராக பணிபுரிந்தேன் என்று சொல்லியிருந்தேன் என்றால் சரிதான். முதல் விசாரணையில் ே ஹாட்டலின் பெயரை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் வந்த பைக்கின் நிறம், எண் விவரங்களை முதல் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் நான் பைக்கில் வரவில்லை நடந்து தான் வந்தேன் அதனால் தான் சொல்லவில்லை. வழக்கு சம்மந்தமாக எந்த போலிசார் எத்தனை மணிக்கு எந்த இடத்தில் விசாரணை செய்து வரைபடம் வரைந்தார்கள் என்றால் செப்டம்பர் 1ம் தேதி 2018ம் வருடம் காலை 6 மணிக்கு பெரம்பலூர் புது பஸ் ஸ்டாண்டிடம் எனது நண்பரிடம் முருகன் கோவிலின் அருகில்

பேசிக்கொண்டிருந்தேன். அப்போது போலிசார் விசாரித்து கொண்டு படம் வரைந்து கொண்டிருந்தனர். நான் சொல்வது போல் பெரம்பலூர் புதிய பேருந்து நிலையத்தில் எந்த முருகன் கோவில் இல்லை என்றாலும், அங்கு வைத்து போலிசார் எந்த வரைபடமும் வரையவில்லை என்றாலும் சரியல்ல. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் ஏற்கனவே தயார் செய்து வைத்திருந்த பார்வைமகஜர் வரைபடத்தின் அடிப்படையில் தயார் செய்து வைத்திருந்த பார்வை மகஜரில் கையொப்பமிட்டேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்மந்தமாக சாட்சியாக இருக்கும்படி போலிசார் கேட்டுக் கொண்டதன்பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.